## மேயர்கள் உங்கள் ஆட்கள் இருக்கிறார்கள் என்கிறார்கள்

# புதிய ஆட்சியில் பணம் ஒதுக்காததால் திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை என்று சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் கருப்புடையில் வந்தார்கள்!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பதில்!

சென்னை, செப்.3-

சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் பேசுகையில் மேயர்கள் எல்லாம் உங்கள் ஆட்கள் தான் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு பேசிய போது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு பேசுகையில் பணம் ஒதுக்காததால் திட்டங்கள் செயல்படுத்த முடியவில்லை என்று சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் கருப்பு உடையில் வந்தார்கள் என்ற குறிப்பிட்டார்.

இதுகுறித்து முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-



குடி தண்ணீருக்காக ஆங்காங்கே பெண்கள் குடத்தை தூக்கிக் கொண்டு செல்கிறார்கள் என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். அந்தத் திட்டம் குறித்து சொன்னால், நீண்ட நேரமாகும். கிட்டத்தட்ட 2,500 MLD கொடுத்த இடத்தில், 4,000 MLD புதிய திட்டங்கள் மூலமாக குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, குடி தண்ணீர் பற்றியெல்லாம் பிரச்சினை இல்லை.

மேலும், மேயர்கள் உங்கள் ஆட்கள் இருக்கிறார்கள்; எல்லோரும் உங்களுடைய ஆட்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார். எந்தத் திட்டமும், புதிய ஆட்சி வந்த பிறகு செயல்படுத்துவதற்கான அதிகாரம் இல்லை; பணம் தரவில்லை; செயல்படுத்தவில்லை; அப்படியே ஸ்தம்பித்து போயிருக்கிறது. கடந்த வாரம் கூட, சென்னை மாநகராட்சியில் எங்களுக்கு எந்தப் பணமும் sanction செய்யவில்லை என்று கருப்பு உடை அணிந்து councillors சென்றிருக்கிறார்கள். நான் திருச்சியை வைத்து சொல்கிறேன். அப்போது, முதலமைச்சர் இருக்கிறார், அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நினைத்தேன்.

ஏற்கெனவே சாலைக்காக ரூ.392 கோடி ஒதுக்கப்பட்டது; அது நிறுத்தப்பட்டிருக்கிறது. 100 ஏக்கர் ஏரியை சரி செய்வதற்காக ரூ.34 கோடி கொடுக்கப்பட்டது. அதுவும் நிறுத்தப்பட்டிருக்கிறது.

எனவே, பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன; நடைபெறவில்லை.

நீங்கள் உடனடியாக உங்களுடைய துறைச் செயலாளரை அழைத்து, எந்தெந்தப் பணிகளெல்லாம் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கேளுங்கள். கேட்டு உடனடியாக நடத்த சொல்லுங்கள்.

கவுன்சிலரோ, மேயரோ, அரசு சொல்கிற திட்டத்தை செயல்படுத்த தவறினால், இரண்டு முறை பார்த்து, ஆணையருக்கே அந்த அதிகாரம் இருக்கிறது; அரசின் சார்பில் உடனடியாக அதை செய்யலாம் என்று சொல்வதற்கு ஆணையருக்கே அதிகாரம் இருக்கிறது; அதனை செய்ய சொல்லலாம். எனவே, உங்கள் மேயர் இருக்கிறார்; உங்கள் கவுன்சிலர் இருக்கிறார் என்று சொல்வதில்லை. நீங்கள் அரசாங்கம் மேலாண்மை செய்வதற்கு அனைத்து அதிகாரங்களும் உங்களிடம் இருக்கிறது. அதை செய்யுங்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

---

### உயர் கல்வித்துறை அமைச்சரிடம் ஒன்றிரண்டு முறை யோசித்து கேள்வி கேளுங்கள்!

# பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நகைச்சுவை!

## பேரவையில் அனைவரும் ரசித்து சிரித்தனர்!

சென்னை, செப்.3-

சட்டப்பேரவையில் நேற்று கழக உறுப்பினர் அ.செ.வில்வநாதன் மாதனூரிலுள்ள புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலைக் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரிக்கு விளையாட்டரங்கம் அமைத்துத் தர வேண்டும் என்பது குறித்து கவனஈர்ப்பில் கேட்டிருந்தார். இதற்கு பதில் அளித்த உயர் கல்வித்துறை அமைச்சர் நீண்ட பதிலளித்தார்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்து கவனத்தை ஈர்த்திருக்கிறார். அறிவியல் கல்லூரிக்கு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய பதில் எப்படி இருக்கிறது என்றால், அவசரப்பட்டு யாரும் எங்கிட்டே இனிமேல் எந்தக் கோரிக்கையும் வைக்காதீங்க. ஒன்றிரண்டு முறை யோசித்து கேள்வி கேளுங்கள் என்று சொல்வதைப்போல் இருக்கிறது" என்று நகைச்சுவையுடன் கூறினார்.

இதனால் பேரவைத் தலைவர் உள்பட பேரவையில் அனைவரும் ரசித்து சிரித்தனர்.

---

## திருவண்ணாமலை மலையடிவாரத்தில்

# நூறாண்டுக்கு மேலாக குடியிருக்கும் 1,535 குடும்பங்களுக்கு பட்டா வழங்கிடுக!

## சட்டமன்றத்தில் கழக கொறடா எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, செப்.3-

சட்டமன்றத்தில் நேற்று தி.மு.க. சட்டமன்ற கொறடா ஏ.வ.வேலு அவர்கள் பேசியதாவது:-

பேரவை தலைவர் அவர்களே, இந்த அவையில் வருவாய்த்துறை அமைச்சர் கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னவென்றால்,

திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட திருவண்ணாமலை அடிவாரத்தில் உள்ள 1, 5, 6, 7, 14, 24, 25, 26 உள்ளிட்ட எட்டு வார்டுகள் உள்ளன. இங்கு பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள், இவர்கள் நூறாண்டுகளுக்கு மேலாக இங்கு குடி இருந்து வருகிறார்கள். தாங்கள் வசிக்கும் வீடுகளுக்கு பட்டா வேண்டும் என்று பலமுறை முயற்சித்தார்கள். நகராட்சி பகுதிகளில் பட்டா கொடுக்க தடை உள்ள காரணத்தால் அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருந்தது.'

இந்நிலையில் கடந்த தி.மு.க. ஆட்சியில் திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினராக நான் இருந்த காரணத்தால் சட்டமன்றத்தில் அப்பகுதி மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று அப்போதைய முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தேன். முதலமைச்சரும் அந்த கோரிக்கையை ஏற்று 21.2.2025 அன்று அரசாணை 97-இன் படி ஏற்கனவே இருந்த தடையணையை நீக்கி பட்டா வழங்க உத்தரவிட்டார்கள்.

இந்நிலையில் யானை ராஜேந்திரன் என்பவர் மலையடிவாரத்தில் உள்ள மக்களை காலி செய்ய வேண்டுமென சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதன் அடிப்படையில் 1,535 வீடுகளை ஒரு மாதத்தில் காலி செய்ய வேண்டுமென வருவாய்த்துறை அதிகாரிகள் ஒரு அறிவிப்பு பலகையை வைத்தார்கள்.

அந்த 1,535 வீடுகளுக்கும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக படிவம்7 வழங்கப்பட்டது. அதன் படி 1,535 அவர்களும் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதால் 30 நாளைக்குள் அவர்களாக காலி செய்ய வேண்டும், தவறினால் ஆக்கிரமிப்பு சட்டம் 1905 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட கலெக்டர் மூலம் நோட்டீஸ் வழங்கினார்கள்.

### பட்டா செய்ய தகுதி உள்ள இடம்!

அவர்கள் வழங்கிய நோட்டீஸிலேயே வகைப்பாடு என்ற இடத்தில் சர்க்கார் புறம்போக்கு இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த வகையில் இது பட்டா செய்ய தகுதி உள்ள இடம் என்பதால், பட்டா செய்து கொடுக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.



மேற்கண்ட அந்த 1,535 குடும்பங்களுக்கும், அவர்கள் வசிக்கும் வீட்டிற்கு மாநகராட்சி வரி செலுத்துகிறார்கள், குடிநீர் இணைப்பு உள்ளது குடும்ப அட்டை, மின் அட்டை உள்ளது, ஆதார் அட்டை உள்ளது, பல்வேறு பொதுத் தேர்தல்களில் வாக்களிக்கும் வகையில் வாக்காளர் பட்டியல் பெயர்கள் உள்ளது. இவ்வளவு ஆதாரமும் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் வைத்துள்ளார்கள்.

இந்நிலையில் தற்பொழுது புதிதாக பொறுப்பேற்றுள்ள இந்த அரசு 27.8.2026 அன்று போடப்பட்ட அரசாணை எண் 663-இன் படி சிறப்பு வரன்முறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் இங்குள்ள மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கலாம் என்று அறிவித்துள்ளது.

இந்நிலையில் இப்பகுதியில் வசிக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் அண்ணாமலையார் மலையடிவார குடியிருப்போர் நல சங்கம் என்ற பெயரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று போட்டு உள்ளார்கள்.

### மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும்!

இந்த வழக்கு முடியும் வரை இங்கு வசிக்கும் மக்களுக்கு வீட்டை காலி செய்து விடுவார்களோ என்று அச்சமும் பதட்டமும் உள்ளது, எனவே அவர்களுடைய அச்சத்தையும் பயத்தையும் போக்கும் வகையில் அரசு போடப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அவர்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் அரசு சார்பில் தங்களை இணைத்துக் கொண்டு வழக்காடி ஏற்கனவே திமுக அரசின் போது போடப்பட்ட அரசாணையையும் தற்பொழுது போடப்பட்டுள்ள அரசாணையையும்நீதிமன்றத்தில் எடுத்துரைத்து அங்கு குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இவ்வாறு கழக கொறடா எ.வ.வேலு அவர்கள் பேசினார்.

---

## சட்டப் பேரவையில்

# வனத்துறை அமைச்சருக்கு பாடம் எடுத்த முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு!

## தவறான கருத்தை அமைச்சர் வெளியிடுவதா என கேள்வி!

சென்னை, செப். 3-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று வனத்துறை சார்ந்த கேள்வி பதில் நேரத்தில் பேசிய தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், கேரளாவில் காட்டுப்பன்றி வனவிலங்கு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும், அதேபோல் தமிழ்நாட்டிலும் காட்டுப்பன்றியை வனவிலங்கு பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் அல்லது அவற்றை சுட்டுக்கொல்ல உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கையை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த வனத்துறை அமைச்சர் ரஞ்சித் குமார், விவசாயிகளே சில இடங்களில் காட்டுப்பன்றிகளைச் சுடுகிறார்கள்; அதனை நாங்கள் கண்டுகொள்வதில்லை என்ற தவறான கருத்தை அவையில் பதிவு செய்தார்.



இதையடுத்து, அமைச்சரின் பதிலில் இடம்பெற்ற இந்தக் கருத்தைச் சுட்டிக்காட்டிப் பேசிய முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, விவசாயிகளே பல இடங்களில் காட்டுப்பன்றிகளைச் சுடுகிறார்கள்; ஆனால் நாங்கள் அதைக் கண்டுகொள்வதில்லை என்று அமைச்சர் கூறியிருப்பது, பொதுமக்கள் மத்தியில் மிகவும் தவறான கருத்தை உருவாக்கிவிடும்.

ஏனெனில், வன உயிரினங்கள் அனைத்தும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972ன் கீழ் பாதுகாக்கப்படும் உயிரினங்கள் பட்டியலில் இருப்பவை. எனவே காட்டுப்பன்றியாக இருந்தாலும் சரி, வேறு எந்த வனவிலங்காக இருந்தாலும் சரி, அவை பாதுகாக்கப்பட்ட உயிரினங்களாக இருக்கும் போது, அவற்றை சுட்டுக் கொல்லப்படுவதை நாங்கள் கண்டுகொள்வதில்லை; துறை அதிகாரிகளும் கண்டுகொள்வதில்லை என்று வனத்துறை அமைச்சர் இந்த அவையில் கூறுவது தவறான கருத்தை வெளியில் ஏற்படுத்திவிடும்.

மேலும், இந்தக் கருத்து வனவிலங்கு ஆர்வலர்கள் மத்தியிலும், சட்டத்தின் அடிப்படையிலும், இந்த அரசின் மீது தவறான புரிதலை ஏற்படுத்தக்கூடும் என்ற நல்ல நோக்கத்தோடு சுட்டிக்காட்டுகிறேன். எனவே அந்தக் கருத்து அவைக் குறிப்பில் இடம் பெறக் கூடாது என்பதையும் அவையின் கவனத்திற்கு கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இதையடுத்து, தங்கம் தென்னரசு சுட்டிக்காட்டிய கருத்து அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுவதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தெரிவித்தார்.

---

### ஈ.ராஜா எம்.எல்.ஏ.-வே.ஜெயபாலன் - ராணி ஸ்ரீகுமார் எம்.பி. - கருணாநிதி எம்.எல்.ஏ. - தி.மு.ராசேந்திரன் எம்.எல்.ஏ.முன்னிலை!

# முதல் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவன் 311 வது ஜெயந்தி விழா!

## சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை! முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.தலைமை!

தென்காசி, செப்.3 -

முதல் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவர் அவர்களின் 311 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெற்கட்டும் செவலில் அமைந்துள்ள நினைவு மாளிகையில் உள்ள முதல் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவர் அவர்களின் திருஉருவ சிலைக்கு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. தலைமையில்

தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி,கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன், ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. சார்பில் முதல் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவர் அவர்களின் 311 வது ஜெயந்தி விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அதன்படி தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நெல்கட்டும்செவலில் அமைந்துள்ள நினைவு மாளிகையில் உள்ள முதல் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கருணாநிதி (கோவில்பட்டி) தி.மு..இராசேந்திரன் (கடையநல்லூர்) தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பரமகுரு, மா.செல்லதுரை, ஆறுமுகச்சாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் கென்னடி, மனோகரன், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், ஒன்றிய செயலாளர்கள் பொன். முத்தையா பாண்டியன், லாலா சங்கரபாண்டியன், சேர்மதுரை, ராஜதுரை, வெள்ளத்துரை, பெரியதுரை, அழகுசுந்தரம், சீனித்துரை, ரமேஷ்,ஷேக் முகமது, சிவகுமார், நகர செயலாளர்கள் அந்தோணிசாமி, நாகூர்கனி, பிரகாஷ், வெங்கடேசன், கடையநல்லூர் நகர்மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், ஊராட்சி மன்றத் தலைவர் பாண்டியராஜன், மூர்த்தி பாண்டியன், வழக்கறிஞர் பிச்சையா உள்பட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

---

## நெல்லை மத்திய மாவட்டம் நெல்லை

# பேட்டை பகுதி கலைஞர் 8 ம் ஆண்டு நினைவு புகழஞ்சலி பொதுக்கூட்டம்!

### மாவட்ட அவைத் தலைவர் முருகன் தலைமை! மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. – சிவாஜி கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

நெல்லை, செப். 3 -

நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு புகழஞ்சலி பொதுக் கூட்டம்,

நெல்லை மத்திய மாவட்டம், நெல்லை பேட்டை முனிசிபல் பஸ் நிலையம் அருகில்,நெல்லை மத்திய மாவட்ட அவைத்தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்று கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சாதனைகளையும், பல்வேறு திட்டங்களையும் எடுத்துக் கூறியும், நடைபெற்று வரும் த.வெ.க. ஆட்சியின் நிர்வாக சீர்கேட்டையும், விலைவாசி உயர்வினால் மக்கள்படும் அவதிகளையும் விரிவாக எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.வி.சுரேஷ், நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர். ராஜு, நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் வழக்கறிஞர் ஏ.எல்.பி. தினேஷ், ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, மாரியப்பன், பகுதி பொறுப்பாளர் டாக்டர் சங்கர் உள்பட நெல்லை மத்திய மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடு நெல்லை பேட்டை மேற்கு பகுதி பொறுப்பாளர் கா.சங்கர் செய்திருந்தார்.

---



தி.மு.கழக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் மருத்துவ செலவிற்காக கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கிய ரூபாய் 25 ஆயிரத்திற்கான வங்கி வரைவோலையை கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், விருத்தாசலம் திருமதி.அ.ரபின்சாபி அப்துல்ஹமீது அவர்களிடம் வழங்கினார். உடன் அவர்களது குடும்பத்தார் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முகமதுபாசில் நகர இளைஞரணி அமைப்பாளர் பொன்.கணேஷ் துணை அமைப்பாளர்கள் தளபதி, குமார், நிஷாந்த், கார்த்திக், அஜய் ஆகியோர் உள்ளனர்.



'அறிவாலயம்' முரளி – எம். வசந்தி ஆகியோரின் மகள் டாக்டர் மு.சாருஸ்ரீ, M.B.B.S., M.S.(OBG), (Chennai10, Apollo Hospitals – First Med.) ஜெயங்கொண்டம் Jc.HGF.A.P.இராமநாதன் – கலைச்செல்வி ஆகியோரின் மகன் டாக்டர் ஆர்.செல்வநாதன், M.B.B.S., (அரசு மருத்துவர், உதயநத்தம் ஆரம்ப சுகாதார நிலையம்) ஆகியோரது திருமண நிச்சயதார்த்தம் 31.08.2026, திங்கட்கிழமை சென்னை, அக்கார்டு ஓட்டலில் நடைபெற்றது.